


# குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

## மானியக் கோரிக்கை எண். 44

அறிவிப்புகள்
2022–2023

# குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

## மானியக் கோரிக்கை எண். 44

## அறிவிப்புகள்

## 2022 - 2023

**தா.மோ. அன்பரசன்**
குறு, சிறு மற்றும் நடுத்தரத்
தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்

## குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் சார்பில் 27 புதிய அறிவிப்புகளை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

**தா.மோ. அன்பரசன்**
குறு, சிறு மற்றும் நடுத்தரத்
தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்

1) கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், காடாம்புலியூரில் சுமார் 29 ஏக்கரில், ரூ.13 கோடி திட்ட மதிப்பில், புதிய தொழிற்பேட்டை அமைக்கப்படும்.

கடலூர் மாவட்டத்தில், வளர்ந்து வரும் தொழில் பகுதியான பண்ருட்டி வட்டம் காடாம்புலியூரில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் முனைவோருக்காக சுமார் 29 ஏக்கரில், ரூ.13 கோடி திட்ட மதிப்பில் புதிய தொழிற்பேட்டை, தமிழ்நாடு சிட்கோ மூலம் அமைக்கப்படும். இதன் மூலம், சுமார் 1,000 வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

2) தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், லிங்கம்பட்டியில் சுமார் 54 ஏக்கரில் ரூ.25 கோடி திட்ட மதிப்பில் புதிய தொழிற்பேட்டை அமைக்கப்படும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு முழுவதும் சமச்சீரான தொழில் வளர்ச்சியை ஏற்படுத்திட, தமிழ்நாடு சிட்கோ மூலம், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் முனைவோர் பயன்பெறும் வகையில், தமிழ்நாட்டின் தென்பகுதியான தூத்துக்குடி மாவட்டத்தில் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதியான கோவில்பட்டி வட்டம், லிங்கம்பட்டியில் சுமார் 54 ஏக்கரில், ரூ.25 கோடி திட்ட மதிப்பில் புதிய தொழிற்பேட்டை அமைக்கப்படும். இதன் மூலம், சுமார் 2,000 வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும்.



3) கடலூர் மாவட்டம் மதவேடு கிராமத்தில் 11.41 ஏக்கரில் ரூ.4.70 கோடி திட்ட மதிப்பில், ரூ.3.50 கோடி தமிழ்நாடு அரசு மானியத்துடன் புதிய தனியார் தொழிற்பேட்டை அமைக்கப்படும்.

கடலூர் மாவட்ட நகர்ப்புற பகுதிகளில் போதிய இடவசதியின்றி செயல்பட்டு வரும் தானியங்கி வாகன சேவை தொழிற்கூடங்களை, நகர்ப்புறத்துக்கு வெளியே மாற்றி அமைக்கும் திட்டத்தின் கீழ், அனைத்துத் தானியங்கி வாகன சேவைகள் குழுமத்தின் மூலம், கடலூர் மாவட்டம், மதவேடு கிராமத்தில் 11.41 ஏக்கரில் ரூ.4.70 கோடி திட்ட மதிப்பில், ரூ.3.50 கோடி தமிழ்நாடு அரசு மானியத்துடன் புதிய தனியார் தொழிற்பேட்டை அமைக்கப்படும்.

**4) விருதுநகர் மாவட்டம், இராஜபாளையத்தில் ஆயத்த ஆடைசெய்யும் மகளிர் நெசவு குறுங்குழுமத்திற்கான ஒரு பொது வசதி மையம், ரூ.3.75 கோடி தமிழ்நாடு அரசு மானியத்துடன் அமைக்கப்படும்.**

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையத்தில் 550 பெண் தொழிலாளர்களுடன் இயங்கிவரும் ஆயத்த ஆடைகள் நெசவு செய்யும் 103 மகளிர் குறுந்தொழில் முனைவோர் குழுமத்தின் ஆயத்த ஆடைகள் உற்பத்தித்திறன் மற்றும் தரம் ஆகியவற்றின் மேம்பாட்டிற்கு, உயர் தொழில்நுட்ப விசைத்தறிகள் உள்ளிட்ட பிற வசதிகள் கொண்ட பொது வசதி மையம், ரூ.3.75 கோடி தமிழ்நாடு அரசு மானியத்துடன் ஏற்படுத்தப்படும்.



**5) கோயம்புத்தூர் மாவட்டம், சின்னவேடம்பட்டியில் அலுமினியம் அச்சு வார்ப்பு செய்யும் குறுங்குழுமத்திற்கான ஒரு பொது வசதி மையம், ரூ.5.80 கோடி தமிழ்நாடு அரசின் மானியத்துடன் அமைக்கப்படும்.**

கோயம்புத்தூர் மாவட்டத்தில் 3,000 தொழிலாளர்களுடன் இயங்கிவரும் சுமார் 1,000 அலுமினியம் அச்சு வார்ப்பு குறுந்தொழில் நிறுவனங்களில் 100 குறுந்தொழில் முனைவோரின் குழுமத்திற்கு தரமேம்பாடு மற்றும் துரித உற்பத்தி ஆகியவற்றிற்கான, உயர் தொழில்நுட்ப அலுமினியம் அச்சுவார்ப்பு இயந்திரங்கள் உள்ளிட்ட பிற வசதிகள் கொண்ட பொதுவசதி மையம், கோயம்புத்தூர் மாவட்டம், சின்னவேடம்பட்டியில், ரூ.5.80 கோடி தமிழ்நாடு அரசின் மானியத்துடன் ஏற்படுத்தப்படும்.

6) கடலூர் மாவட்டம், விருத்தாசலத்தில் பீங்கான் மின்காப்பு உபகரணங்கள் செய்யும் குறுங்குழுமத்திற்கான ஒரு பொது வசதி மையம், ரூ.2.80 கோடி தமிழ்நாடு அரசு மானியத்துடன் அமைக்கப்படும்.

கடலூர் மாவட்டம், விருத்தாச்சலத்தில் பீங்கான் மின்காப்பு உபகரணங்கள் உற்பத்தியில் 1,500 தொழிலாளர்களுடன் இயங்கி வரும் சுமார் 165 குறுந்தொழில் நிறுவனங்களில், 65 குறுந்தொழில் முனைவோர் குழுமத்திற்கு, உயர் தொழில்நுட்ப இயந்திரங்கள் உள்ளிட்ட மற்ற வசதிகள் கொண்ட பொது வசதி மையம், விருத்தாச்சலம் தொழிற்பேட்டையில், ரூ.2.80 கோடி தமிழ்நாடு அரசு மானியத்துடன் ஏற்படுத்தப்படும்.



7) ஈரோடு மாவட்டம், ஈரோட்டில் மஞ்சள் தூள் உற்பத்தி செய்யும் குறுங்குழுமத்திற்கான ஒரு பொது வசதி மையம், ரூ.3.50 கோடி தமிழ்நாடு அரசு மானியத்துடன் அமைக்கப்படும்.

ஈரோடு மாவட்டம், ஈரோட்டில் மஞ்சள் தூள் தயாரிப்பில் 2,000 தொழிலாளர்களுடன் இயங்கி வரும் சுமார் 100 குறுந்தொழில் நிறுவனங்களில், 60 குறுந்தொழில் முனைவோரின் குழுமத்திற்கு குறைந்த வெப்பநிலையில் உயர்தர மஞ்சள் தூள் தயாரிப்பதற்கான நவீன தொழில்நுட்ப இயந்திரங்கள் மற்றும் பரிசோதனை வசதிகளுடன் கூடிய ஒரு பொது வசதி மையம், ரூ.3.50 கோடி தமிழ்நாடு அரசு மானியத்துடன் ஏற்படுத்தப்படும்.

8) ஈரோடு மாவட்டம், பவானியில் ஜமுக்காளம் உற்பத்தியாளர்களுக்கென ஒரு பொது வசதி மையம், ரூ.3.50 கோடி தமிழ்நாடு அரசு மானியத்துடன் நிறுவப்படும்.

ஈரோடு மாவட்டம், பவானி வட்டத்தில் சுமார் 2,500 நபர்களுடன் ஜமுக்காள உற்பத்தியில் ஈடுபட்டுள்ள 250 உற்பத்தியாளர்களுக்கு அவர்களின் உற்பத்தித் திறன் மற்றும் தர மேம்பாட்டிற்காக நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய ஒரு பொது வசதி மையம், பவானியில், ரூ.3.50 கோடி தமிழ்நாடு அரசு மானியத்துடன் ஏற்படுத்தப்படும்.



9) திருப்பூர் மாவட்டம் குண்டடம் வட்டாரத்தில், ரூ.10 கோடி தமிழ்நாடு அரசு பங்களிப்புடன் ரூ.16 கோடி திட்ட மதிப்பீட்டில், ஒரு கயிறு குழும பொது வசதி மையம் நிறுவப்படும்.

திருப்பூர் மாவட்டம், குண்டடம் வட்டாரத்தில் சுமார் 3,000 தொழிலாளர்களுடன் இயங்கி வரும் 290 கயிறு தொழில் நிறுவனங்களில், 35 கயிறு தொழில் நிறுவனங்கள் பயன் பெறும் வகையில், சாயமிடப்பட்ட தென்னை நார் கயிறு, தென்னை நார் கயிறு ஊசி ஒட்டுக்கம்பளம், கயிறு மிதியடிகள் மற்றும் தரை விரிப்புகள் ஆகிய மதிப்பு கூட்டப்பட்ட ஏற்றுமதிசார் பொருட்களின் உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில், ரூ.10 கோடி தமிழ்நாடு அரசு பங்களிப்புடன், ரூ.16 கோடி திட்ட மதிப்பீட்டில், ஒரு கயிறு குழும பொது வசதி மையம் நிறுவப்படும்.

**10) கரூர் மாவட்டம் க.பரமத்தி வட்டாரத்தில் ரூ.5 கோடி தமிழ்நாடு அரசு பங்களிப்புடன் ரூ.6.93 கோடி திட்ட மதிப்பீட்டில், ஒரு கயிறு குழும பொது வசதி மையம் நிறுவப்படும்.**

கரூர் மாவட்டம், க.பரமத்தி வட்டாரத்தில் சுமார் 700 தொழிலாளர்களுடன் இயங்கி வரும் 60 கயிறு தொழில் நிறுவனங்களில், 15 கயிறு தொழில் நிறுவனங்கள் பயன் பெறும் வகையில், கயிறு மிதியடிகள் மற்றும் தரை விரிப்புகள், இரு பிரி கயிறு மற்றும் தென்னை நார்வலை ஆகிய மதிப்பு கூட்டப்பட்ட ஏற்றுமதிசார் பொருட்களின் உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில், ரூ.5 கோடி தமிழ்நாடு அரசு பங்களிப்புடன் ரூ.6.93 கோடி திட்ட மதிப்பீட்டில், ஒரு கயிறு குழும பொது வசதி மையம் நிறுவப்படும்.



**11) திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் நகரத்தில் ரூ.2.25 கோடி அரசு மானியத்துடன் ரூ.2.50 கோடி மதிப்பில், ஒரு ஊதுபத்தி குறுந்தொழில் குழுமம் அமைக்கப்படும்.**

திருப்பத்தூர் மாவட்டத்தில் சுமார் 1,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கி வரும் 100 ஊதுபத்தி தயார் செய்யும் குறுந்தொழில் நிறுவனங்களில் 25 நிறுவனங்கள் பயன் பெறும் வகையில், ரூ.2.25 கோடி அரசு மானியத்துடன் ரூ.2.50 கோடி மதிப்பில், திருப்பத்தூர் நகரத்தில் ஒரு ஊதுபத்தி குறுந்தொழில் குழுமம் அமைக்கப்படும்.

**12) கன்னியாகுமரி மர சிற்பம் செதுக்குவோர் தொழிற் கூட்டுறவு சங்கத்தில் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில், ஒரு பொது வசதி மையம், அரசு மானியத்துடன் அமைக்கப்படும்.**

200 நபர்களுக்கு வேலைவாய்ப்பை அளித்திடும் கன்னியாகுமரி மர சிற்பம் செதுக்குவோர் தொழிற் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ள 50 குறுந்தொழில் நிறுவனங்களின் செயல்திறனை அதிகரிக்க, ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் புதிய தொழில்நுட்ப CNC மரம் செதுக்கும் இயந்திரம், மர இழைப்பு இயந்திரம் மற்றும் கணினி கொள்முதல் செய்யப்பட்டு, சங்கத்தில் பொது வசதி மையம் அரசு மானியத்துடன் அமைக்கப்படும்.



**13) கோவிட்-19 பெருந்தொற்று காலத்தில் பாதிக்கப்பட்ட தகுதிவாய்ந்த தொழில்முனைவோர் பயனடையும் வகையில் தொழில்முனைவோர் கோவிட் உதவி மற்றும் நிவாரணத் திட்டம் (Covid Assistance and Relief to Entrepreneurs - CARE) என்கின்ற புதிய திட்டம் ரூ.50 கோடி நிதி ஒதுக்கீட்டுடன், ஓராண்டு காலத்திற்கு செயல்படுத்தப்படும்.**

கோவிட்-19 பெருந்தொற்றுநோயால் தொழில் பாதிக்கப்பட்ட தகுதிவாய்ந்த தொழில்முனைவோர் தங்களது தொழிலை நேரடியாகவோ, வாரிசுதாரர் மூலமாகவோ மீண்டும் அமைக்கவோ அல்லது புதிய தொழில் தொடங்கவோ உதவிடும் வகையில், ரூ.25 இலட்சம் வரை மானியத்துடன் கூடிய கடன் திட்டம் மற்றும் பெரும் நிதி சிரமத்திற்குள்ளான நிறுவனங்கள் தங்கள் உற்பத்தித் திறனை மேம்படுத்திட, தொழில்நுட்ப மேம்பாடு/நவீனப்படுத்துதலை மேற்கொள்வதற்கு ஏற்படும் செலவை ஈடுகட்டும் வகையில், ரூ.25 இலட்சம் வரை முதலீட்டு மானியத் திட்டம் அடங்கிய "தொழில் முனைவோர் கோவிட் உதவி மற்றும் நிவாரணத் திட்டம்" (Covid Assistance and Relief to Entrepreneurs) என்ற புதிய திட்டம், ரூ.50 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் ஓராண்டு காலத்திற்கு செயல்படுத்தப்படும்.

12) கன்னியாகுமரி மர சிற்பம் செதுக்குவோர் தொழிற் கூட்டுறவு சங்கத்தில் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில், ஒரு பொது வசதி மையம், அரசு மானியத்துடன் அமைக்கப்படும்.

200 நபர்களுக்கு வேலைவாய்ப்பை அளித்திடும் கன்னியாகுமரி மர சிற்பம் செதுக்குவோர் தொழிற் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ள 50 குறுந்தொழில் நிறுவனங்களின் செயல்திறனை அதிகரிக்க, ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் புதிய தொழில்நுட்ப CNC மரம் செதுக்கும் இயந்திரம், மர இழைப்பு இயந்திரம் மற்றும் கணினி கொள்முதல் செய்யப்பட்டு, சங்கத்தில் பொது வசதி மையம் அரசு மானியத்துடன் அமைக்கப்படும்.



13) கோவிட்-19 பெருந்தொற்று காலத்தில் பாதிக்கப்பட்ட தகுதிவாய்ந்த தொழில்முனைவோர் பயனடையும் வகையில் தொழில்முனைவோர் கோவிட் உதவி மற்றும் நிவாரணத் திட்டம் (Covid Assistance and Relief to Entrepreneurs - CARE) என்கின்ற புதிய திட்டம் ரூ.50 கோடி நிதி ஒதுக்கீட்டுடன், ஓராண்டு காலத்திற்கு செயல்படுத்தப்படும்.

கோவிட்-19 பெருந்தொற்றுநோயால் தொழில் பாதிக்கப்பட்ட தகுதிவாய்ந்த தொழில்முனைவோர் தங்களது தொழிலை நேரடியாகவோ, வாரிசுதாரர் மூலமாகவோ மீண்டும் அமைக்கவோ அல்லது புதிய தொழில் தொடங்கவோ உதவிடும் வகையில், ரூ.25 இலட்சம் வரை மானியத்துடன் கூடிய கடன் திட்டம் மற்றும் பெரும் நிதி சிரமத்திற்குள்ளான நிறுவனங்கள் தங்கள் உற்பத்தித் திறனை மேம்படுத்திட, தொழில்நுட்ப மேம்பாடு/நவீனப்படுத்துதலை மேற்கொள்வதற்கு ஏற்படும் செலவை ஈடுகட்டும் வகையில், ரூ.25 இலட்சம் வரை முதலீட்டு மானியத் திட்டம் அடங்கிய "தொழில் முனைவோர் கோவிட் உதவி மற்றும் நிவாரணத் திட்டம்" (Covid Assistance and Relief to Entrepreneurs) என்ற புதிய திட்டம், ரூ.50 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் ஓராண்டு காலத்திற்கு செயல்படுத்தப்படும்.

**14) கோயம்புத்தூர், ஓசூர், திருச்சி மற்றும் மதுரையில் வணிக மற்றும் ஏற்றுமதி வசதி மையங்கள், ரூ.10 கோடி செலவில் நிறுவப்படும்.**

பெருந்தொழில் நிறுவனங்கள் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு வணிக வசதி சேவைகள் வலுப்படுத்தும் வகையில், மாவட்டத் தொழில் மையங்களில் வணிக மற்றும் ஏற்றுமதி வசதி மையங்கள் நிறுவப்படும். தகவல் மையம், முதல் முறை தொழில்முனைவோருக்கான சிறப்புப் பிரிவு மற்றும் நிபுணர் உதவி மையங்கள் அமைக்கப்படும். இதற்கான பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படுவார்கள். முதற்கட்டமாக கோயம்புத்தூர், ஓசூர், திருச்சி, மதுரை ஆகிய நகரங்களை மையமாகக் கொண்டு, ரூ.10 கோடி செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.



**15) தொழில்முனைவோர் எதிர்கொள்ளும் நிதி சிக்கல்களை எளிதாக்கும் வகையில் தேர்வு செய்யப்பட்ட வங்கி சாரா நிதி நிறுவனங்கள் (NBFCs), துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் சுயவேலைவாய்ப்புத் திட்டங்களின் கீழ் பங்கு பெற அனுமதிக்கப்படும்.**

புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (NEEDS) மற்றும் வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP) ஆகிய மாநில சுயவேலைவாய்ப்புத் திட்டங்களின் கீழ் துறையால் வங்கிகளுக்கு அனுப்பப்பட்ட விண்ணப்பங்களில் பயனாளிகளின் கடன் குறியீடு (CIBIL Score) குறைபாடு காரணமாக சுமார் 30% விண்ணப்பங்களுக்கு மட்டுமே வங்கிகள் ஒப்புதல் அளிக்கின்றன. எனவே, தகுதியான விண்ணப்பதாரர்கள் எதிர்கொள்ளும் நிதி சிக்கல்களை எளிதாக்கும் வகையில் RBI இல் பதிவு செய்த தேர்வு செய்யப்பட்ட வங்கி சாரா நிதி நிறுவனங்கள் (NBFCs), சுயவேலைவாய்ப்புத் திட்டங்களின் கீழ் கடன் வழங்க, ஏற்கனவே நடைமுறையில் உள்ள வழிகாட்டுதல்களின்படி அனுமதிக்கப்படும்.

16) வேதிப்பொருள் கலப்படமில்லா ஜவ்வரிசி மற்றும் ஜவ்வரிசி சார்ந்த பிற உணவுப் பொருட்களுக்கான வர்த்தக முத்திரை பதிவு செய்யப்படும்.

ஜவ்வரிசி உற்பத்தியில் வேதிப்பொருள்கள் கலப்படம் செய்வது ஜவ்வரிசியின் பாரம்பரிய சந்தைகள் குறைவதற்கு ஒரு காரணமாகிறது. வேதிப்பொருள் கலப்படமில்லா ஜவ்வரிசி மற்றும் ஜவ்வரிசி சார்ந்த பிற உணவுப் பொருட்களின் தயாரிப்பை ஊக்குவிக்க சேகோசர்வ் நடவடிக்கை மேற்கொள்ளும். M-TIPB மூலமாக வேதிப்பொருள் கலப்படமில்லா ஜவ்வரிசி மற்றும் ஜவ்வரிசி சார்ந்த பிற உணவுப் பொருட்களுக்காக, வர்த்தக முத்திரை பதிவு செய்யப்படும்.



17) வேதிப்பொருள் கலப்படமில்லா ஜவ்வரிசிக்கு வணிக அடையாள குறியீடு பெறுவதற்கு ஏதுவாக ரூ.4 கோடி செலவில் சேகோசர்வ் ஆய்வகம் மேம்படுத்தப்படும்.

வேதிப்பொருள் கலப்படமில்லா ஜவ்வரிசிக்கு வணிக அடையாள குறியீடு பெறும் தேவையை, முழுமையாக பூர்த்தி செய்யக்கூடிய வகையில், சேகோசர்வ் ஆய்வகத்தில் மேற்கொள்ளும் சோதனைகள், இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலை ஆணையத்தின் (FSSAI) ஆய்வகங்களுக்கு இணையாகவோ அல்லது அதற்கு மேலாகவோ இருக்கும் வகையில், ரூ.4 கோடி செலவில் நவீன உபகரணங்களை கொள்முதல் செய்து மேம்படுத்தப்படும்.

18) காக்களூர் மத்திய மின்பொருள் சோதனைக் கூடத்தின் சோதனை வசதிகள் ரூ.1.32 கோடி செலவில் மேம்படுத்தப்படும்.

காக்களூரில் உள்ள மத்திய மின்பொருள் சோதனைக் கூடத்தின் (CETL) சோதனை வசதிகளை மேம்படுத்தும் விதமாக, மின்கம்பி வடத்தில் தீ பரவாமல் தடுப்பதற்கும் மற்றும் லுமினியர்களில் நீர் ஊடுருவலுக்கு எதிராக தயாரிப்பின் திறன் போன்றவை சோதனை செய்வதற்கும் தேவையான பரிசோதனை உபகரணங்கள், ரூ.1.32 கோடி செலவில், கொள்முதல் செய்து மேம்படுத்தப்படும்.



19) குன்னூர் இண்ட்கோசர்வ் நிறுவனத்தில் அதிநவீன தேயிலை கலப்பு மற்றும் மேம்படுத்தப்பட்ட பேக்கேஜிங் பிரிவு, ரூ. 3.90 கோடி செலவில் அமைக்கப்படும்.

தொழிற்கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளின் இலாபத்தை அதிகரிக்க நீலகிரி மாவட்டம், குன்னூரில் உள்ள INDCOSERVE நிறுவனத்தில் அதிநவீன தேயிலை கலப்பு மற்றும் டெட்ரா பாக்ஸ் பேக்கேஜிங் உட்பட மேம்படுத்தப்பட்ட பேக்கேஜிங் பிரிவு, 2022-23ஆம் ஆண்டு சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து (SADP) ரூ.3.90 கோடி செலவில் அமைக்கப்படும். இப்புதிய வசதி, இப்பகுதியில் உள்ள தனியார் தேயிலை தொழிற்சாலைகளுக்கு நியாயமான விலையில் சேவைகளை வழங்க வழிவகை செய்வதன் மூலம், தொழிற்கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளுக்கு புதிய தொழில் வாய்ப்புகள் உருவாகும்.

20) 2022-23ஆம் நிதி ஆண்டிலிருந்து, 100 புத்தொழில் நிறுவனங்களுக்கு (Startups) முடுக்க உதவியுடன், ரூ.10 கோடி நிதி உதவி வழங்கப்படும்.

தமிழ்நாடு புத்தொழில் ஆதார நிதி (TANSEED) என்ற திட்டத்தின் கீழ், 2022-23ஆம் நிதி ஆண்டிலிருந்து, இலக்கு 50லிருந்து 100 பயனாளிகளாக உயர்த்தப்படும். டான்சீட் பயனாளர்கள் அனைவருக்கும் அவர்களின் தொழில் நிறுவனங்களை விரிவாக்குவதற்கான முடுக்க உதவிகள், தகுதி வாய்ந்த வழிகாட்டும் நிறுவனங்கள் (Accelerators) மூலம் ரூ.10 கோடி செலவில், தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்தால் (TANSIM) வழங்கப்படும்.



21) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், வள்ளியூர் கிராமத்தில் உள்ள 3.06 ஏக்கர் டான்சி நிலத்தில் ரூ. 3 கோடி மதிப்பீட்டில் டான்சிட்கோ கூட்டு முயற்சியில், உடனடியாக பயன்படத்தக்க தொழிற்கூடங்கள் உருவாக்கப்படும்.

டான்சியின் பயன்பாட்டில் இல்லாத நிலம் மற்றும் கட்டிடங்கள் ஆகியவற்றினை, டான்சியும் டான்சிட்கோவும் இணைந்து கூட்டு முயற்சியாக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்முனைவோர் பயன்பாட்டிற்கு உகந்த கட்டமைப்புகள் ஏற்படுத்தப்படும். முதற்கட்டமாக நடப்பு நிதியாண்டில், திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், வள்ளியூர் கிராமத்தில் உள்ள 3.06 ஏக்கர் டான்சி நிலத்தில், ரூ.3 கோடி மதிப்பீட்டில் உடனடியாக பயன்படத்தக்க தொழிற்கூடங்கள் உருவாக்கப்படும்.

22) ஒடுக்கப்பட்ட பிரிவைச் சேர்ந்த தொழில்முனைவோருக்கு இந்த ஆண்டு முதல் மாநில அளவிலான சிறந்த தொழில்முனைவோர் விருது வழங்கப்படும்.

தமிழ்நாட்டில் சிறப்பாக செயல்படும் தொழில் முனைவோரை அங்கீகரித்து ஊக்கப்படுத்தும் விதமாக, மாநில அளவிலான சிறந்த தொழில்முனைவோர் விருது, மாநில அளவிலான வேளாண் சார்ந்த தொழில்களுக்கான சிறந்த தொழில்முனைவோர் விருது, மாநில அளவிலான தரம் மற்றும் ஏற்றுமதிக்கான சிறந்த தொழில்முனைவோர் விருது, மாநில அளவிலான சிறந்த மகளிர் தொழில்முனைவோருக்கான விருது உள்ளிட்ட விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது. ஒடுக்கப்பட்ட பிரிவைச் சேர்ந்த தொழில்முனைவோரை அங்கீகரித்து ஊக்கப்படுத்தும் விதமாக, அவ்வகை தொழில்முனைவோருக்கு, மாநில அளவில் சிறந்த தொழில்முனைவோர் விருது இந்த ஆண்டு முதல் வழங்கப்படும்.



23) பள்ளி மாணவர்களிடையே புத்தாக்க மனநிலை விதைத்திடும் வகையில், 1,560 பள்ளிகளில் 1.5 இலட்சம் பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் "பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டம்" ரூபாய் ஒரு கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

பள்ளி மாணவர்களிடையே புத்தாக்க மனநிலை விதைக்கப்பட "பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டம்" தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தால், 2022-23ஆம் ஆண்டு முதல் நடத்தப்படும். 1.5 இலட்சம் பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில், ரூபாய் ஒரு கோடி மதிப்பீட்டில் 1,560 பள்ளிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**24) தொழில்முனைவோர்கள், அறிவுசார் சொத்து உரிமை (IPR) பெறுவதற்கான குறைந்தபட்ச மானியம் ரூபாய் ஒரு இலட்சம் என வழங்கப்படும்.**

தொழில்துறை பயன்பாட்டிற்கான கண்டுபிடிப்புகளுக்கு தமிழ்நாட்டில் உள்ள, தனிநபர் / நிறுவனங்கள் / குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் / புத்தொழில் நிறுவனங்கள் இந்தியாவிலோ அல்லது வெளிநாட்டிலோ காப்புரிமைப் பதிவு பெற்றிருப்பின், குறைந்தபட்சம் ரூபாய் ஒரு இலட்சம் அல்லது காப்புரிமைப் பெற ஆகும் செலவில், 75% அதிகபட்சமாக ரூ.3 இலட்சம், இதில் எது அதிகமோ அந்த தொகை மானியமாக வழங்கப்படும்.



**25) தொழில் தொடங்குபவர்களுக்கு வணிக வசதி சேவைகளை வட்டார அளவில் எளிதில் வழங்குவதற்கு ஏதுவாக, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையானது, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் வட்டார வள மையங்களுடன் இணைந்து செயல்படும்.**

தற்போது, மாவட்ட அளவில் மட்டுமே மாவட்டத் தொழில் மையங்கள் இயங்கி வருகின்றன. தொழில் தொடங்குபவர்களுக்கு வணிக வசதி சேவைகளை வட்டார அளவில் எளிதில் வழங்குவதற்கு ஏதுவாக, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையானது, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் வட்டார வள மையங்களுடன் இணைந்து செயல்படும். இந்த கூட்டாண்மை முயற்சி 2022-23ஆம் ஆண்டில் 50 வட்டாரங்களில் செயல்படுத்தப்படும்.

26) குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான அரசின் பல்வேறு திட்டங்கள் மற்றும் உதவிகள் குறித்து, ஊராட்சி பிரதிநிதிகள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு (PLF), விழிப்புணர்வு மற்றும் பயிற்சி, EDII மூலம் வழங்கப்படும்.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான அரசின் பல்வேறு திட்டங்கள் மற்றும் உதவிகள் குறித்து, ஊராட்சி பிரதிநிதிகள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு (PLF), விழிப்புணர்வு மற்றும் பயிற்சி, EDII மூலம் வழங்கப்படும். ஊராட்சி ஒன்றிற்கு ஒரு மக்கள் பிரதிநிதி மற்றும் ஒரு சமூக வள நபர் உட்பட இரண்டு நபர்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்படும்.



27) 2022-23ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ள 20 குறுந்தொழில் குழுமங்களைச் சார்ந்த குறுந்தொழில் நிறுவனங்களுக்கு தொழில்முறை கணக்கியல், வரி ஆலோசனை, வரி தாக்கல் செய்தல் மற்றும் நிறுவன செயலக சேவை ஆகிய சேவைகளை முதல் 5 ஆண்டுகளுக்கு அரசு இலவசமாக வழங்கும்.

2022-23ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், திருநெல்வேலி மாவட்டத்தில் சமையல் பாத்திரக் குழுமம், காஞ்சிபுரம் மாவட்டத்தில் நரிக்குறவர்களால் தயாரிக்கப்படும் செயற்கை அணிகலன்கள் குழுமம், கடலூர் மாவட்டத்தில் முந்திரி பதப்படுத்துதல் குழுமம் மற்றும் மதுரை மாவட்டத்தில் பொம்மை தயாரிப்புக் குழுமம் உள்ளிட்ட 20 குறுந்தொழில் குழுமங்கள் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த 20 குழுமங்களில்

உள்ள குறுந்தொழில் நிறுவனங்களுக்கு, தொழில்முறை கணக்கியல், வரி ஆலோசனை, வரி தாக்கல் செய்தல் மற்றும் நிறுவன செயலக சேவை ஆகிய சேவைகளை முதல் 5 ஆண்டுகளுக்கு, அரசு இலவசமாக வழங்கும்.

**தா.மோ. அன்பரசன்**
குறு, சிறு மற்றும் நடுத்தரத்
தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்



அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை—600 001.

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை–600 001.